நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

**சி.சி.எண். 148/2019**

2021ம்ஆண்டு நவம்பர் திங்கள் 18ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.3வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **ரஞ்சித்குமார்** | **வயது** | : | **40** |
| **த/பெ.** | : | **மணி** | **தொழில்** | : | **வியாபாரம்** |
| **ஊர்** | : | **காட்பாடி** | **சமயம்** | : | |
| **வட்டம்** | : | **காட்பாடி** | **சாதி** | : | |
| **மாவட்டம்** | : | **வேலூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் காட்பாடியில் வசிக்கிறேன். காட்பாடி ரயில் நிலையத்திலுள்ள கேண்டீனில் வியாபாரம் செய்கிறேன்.சுமார் 3 அல்லது 4 ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு தேதி நினைவில்லை. அதிகாலை நான் காட்பாடி ரயில் நிலைய நடைமேடை 4,5ல் வியாபாரம் செய்துக்கொண்டிருந்தேன். அப்போது அதிகாலை 05.00 மணி மேல் இருக்கும், கூட்டமாக இருந்தார்கள்.1ம் எதிரியை போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். காவல் ஆய்வாளர் இருந்தார். அப்போது 1ம் எதிரியிடம் போலீசார் பேசிக்கொண்டிருந்தார்கள். அவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்காக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள் நான் கையொப்பம் போட்டேன். 1ம் எதிரியிடம் என்ன விசாரித்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியவில்லை.ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:-

ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் எந்த ஊரைச்சேர்ந்தவர் என்று தெரியாது என்றால் சரிதான். எத்தனை நாட்கள் கழித்து கையெழுத்து போட்டேன் என்றால் ஸ்டேசனில் 1/2 மணி நேரம் கழித்து கையெழுத்து போட்டேன். என்னுடன் எத்தனை நபர்கள் கையெழுத்து போட்டார்கள் என்றால் என்னுடன் ஒருவர் கையெழுத்து போட்டார். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் கையால் எழுதப்பட்டதா, தட்டச்சு செய்யப்பட்டதா என்பது தெரியாது என்றால் சரிதான்.

ம. வி:-

இல்லை

நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், திருப்பத்தூர் வேலூர் மாவட்டம்

**சி.சி.எண். 148/2019**

2021ம்ஆண்டு நவம்பர் திங்கள் 18ம் நாள் வியாழகிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.4வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. ஆனந்தன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது

| | | | | |
|---|---|---|---|---|
| **பெயர்** | : **மதார்பாஷா** | **வயது** | : | **47** |
| **த/பெ.** | : **கரீம்பாஷா** | **தொழில்** | : | **வியாபாரம்** |
| **ஊர்** | : **காட்பாடி** | **சமயம்** | : | |
| **வட்டம்** | : **காட்பாடி** | **சாதி** | : | |
| **மாவட்டம்** | : **வேலூர்** | | | |

**முதல் விசாரணை:-**

நான் காட்பாடியில் வசிக்கிறேன். காட்பாடி ரயில் நிலையத்திலுள்ள கேண்டீனில் வியாபாரம் செய்கிறேன்.எனக்கு தேதி நினைவில்லை. கடந்த 2017ம்ஆண்டு, நான் காட்பாடி ரயில் நிலைய நடைமேடை 4,5ல் வியாபாரம் செய்துக்கொண்டிருந்தேன். அப்போது அதிகாலை 04.30 மணி மேல் இருக்கும், கூட்டமாக இருந்தார்கள். போலீசார் விசாரித்துக்கொண்டிருந்தார்கள். காவல் ஆய்வாளர் இருந்தார். யாரை விசாரித்தார்கள் என்று நினைவில்லை.அங்கு மூன்று நபர்கள் இருந்தார்கள்.அதில் இரண்டு பெண்கள் ஒரு ஆண் இருந்தார்கள். 1ம் எதிரியை எனக்கு அடையாளம் தெரியவில்லை. போலீசார் என்னிடம் சாட்சி கையொப்பம் கேட்டார்கள்.நான் கையொப்பம் போட்டேன். 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள இரண்டாவதாக உள்ள கையொப்பம் என்னுடையதுதான். எதற்காக கையொப்பம் போட்டேன் என்று எனக்கு நினைவில்லை. அந்த கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**( சாட்சியை பகுதி பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கியதன் பேரில் அ.த.கு.வி:-)**

போலீசார் 1ம் எதிரியை பிடித்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள் என்றும், அதற்கு சாட்சியாக என்னை இருக்க சொல்லி கேட்டார்கள் என்று சொன்னால் கும்பலாக இருந்ததால் யாரை விசாரித்தார்கள் என்று தெரியாது.போலீசார் விசாரித்த நபரிடம்

ஒப்புதல் வாக்குமூலம் பெற்று அதற்கு சாட்சியாக தான் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்று சொன்னால் எனக்கு அதுப்பற்றி தெரியாது.

எ.த.கு.வி:-

நடைமேடை 4,5ல் என்னை போல் நிறைய நபர்கள் வியாபாரம் செய்துக்கொண்டிருப்பார்கள் என்றால் சரிதான். சுமார் 40, 50 நபர்கள் வியாபாரம் செய்வார்கள். எத்தனை மணிக்கு கையொப்பம் போட்டேன் என்றால் அன்று மாலை கையொப்பம் வாங்கினார்கள். என்னுடன் எத்தனை நபர்கள் போட்டார்கள் என்றால் அதுப்பற்றி தெரியாது. எந்த போலீசார் கையொப்பம் வாங்கினார்கள் என்று தெரியாது என்றால் சரிதான். நான் கையெழுத்து போட்ட பேப்பரில் கையால் எழுதப்பட்டதா, தட்டச்சு செய்யப்பட்டதா என்பது தெரியாது என்றால் சரிதான்.

ம.வி:-

இல்லை